# பண்டிகை காலத்திற்கு முன்னதாக, மோட்டோரோலா தனது ஸ்மார்ட் ஹோம் அப்ளையன்ஸ் நிறுவனத்தின் உலகளாவிய அறிமுகத்தை பிளிப்கார்ட்டுடன் மேற்கொள்கிறது

- உலகளவில் – முதல் முறையாக, மோட்டோரோலாவின் ஸ்மார்ட் வீட்டு உபகரணங்கள் பிரிவில் 'உண்மையிலேயே ஸ்மார்ட்' சலவை இயந்திரங்கள், குளிர்சாதன பெட்டிகள் மற்றும் ஏர் கண்டிஷனர்கள் அடங்கியுள்ளன.
- இந்த கூட்டாண்மை மேம்பட்ட தொழில்நுட்பங்களுடன் கூடிய ஸ்மார்ட் டிவிகளின் புதிய வகைகள் விரிவாக்கம் மற்றும் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஹோம் ஆடியோ வகைகளைக் காணவுள்ளது

**பெங்களூரு - செப்டம்பர் 17, 2020**: ஸ்மார்ட் டி.வி மற்றும் ஹோம் ஆடியோ வகைகளில் வெற்றிகரமாக கால்பதித்ததையடுத்து, இந்தியாவின் உள்நாட்டு மின்-வர்த்தகச் சந்தையான பிளிப்கார்ட்டுடனான தனது கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்திடும் வகையில், இந்தியாவில் ஸ்மார்ட் ஹோம் உபகரணங்கள் பிரிவில் நுழையவுள்ளதை அறிவித்துள்ளது. சலவை இயந்திரங்கள், குளிர்சாதன பெட்டிகள் மற்றும் ஏர் கண்டிஷனர்கள் உள்ளிட்ட புதிய வழங்குதல்களுடன், இந்திய நுகர்வோருக்கு மோட்டோரோலாவின் பிரீமியம் பிராண்ட் முன்மொழிவு மற்றும் மாறும் தன்ம கொண்ட நுகர்வோர் நடத்தை பற்றிய பிளிப்கார்ட்டின் புரிதலை பின்புலமாகக் கொண்ட, *"உண்மையாகவே ஸ்மார்டானது, உண்மையாகவே புரட்சிகரமானது"* வகையினத் தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

கடந்த ஆண்டு, பிளிப்கார்ட் மற்றும் மோட்டோரோலா, விரைவான தொழில்நுட்ப ரீதியான ஏற்றுக்கொள்ளலைக் கொண்டுள்ளதொரு சந்தையில், நுகர்வோர் பயன்பாட்டுத் தயாரிப்புகளுக்கான பிராண்டின் வழங்குபட்டியலை கட்டமைத்து உருவாக்குவதில் இணைந்து நெருக்கமாகப் பணியாற்றி வருகின்றன. தனது வளர்ந்து வரும் இந்தியா-முழுவதும் நிறைந்துள்ள வாடிக்கையாளர் தளத்திற்கு மிகவும் பொருத்தமான மற்றும் சிறந்த தரமான தயாரிப்பு அனுபவங்களைக் கொண்டுவருவதற்கு நுகர்வோர் கருத்து மற்றும் நுண்ணறிவுகளைப் பயன்படுத்துவதில் பிளிப்கார்ட் ஒரு வலுவான வரலாற்றைக் கொண்டுள்ளது. இரு நிறுவனங்களுக்கிடையிலான இந்த செயல்திட்டக் கூட்டாண்மை, மோட்டோரோலாவின் வாடிக்கையாளர்களுக்கு புதுமையான மற்றும் பிரீமியம் சலுகைகளை அவர்களின் வசதிக்காக வடிவமைக்கப்பட்ட தன்மைகளுடன் வழங்குகிறது.

இந்த அறிவிப்பு குறித்து **தேசியத் தலைவரும், மோட்டோரோலா மொபிலிட்டியின் நிர்வாக இயக்குநருமான திரு. பிரசாந்த் மணி** அவர்கள், "ஏறக்குறைய 100 ஆண்டுகால புரட்சிகரமான கண்டுபிடிப்புகளைக் கொண்ட ஒரு பயணத்துடன், மோட்டோரோலா பல முன்னோடித்துவ நிலைகளில், முக்கியமான கண்டுபிடிப்புகளை வழங்குவதில் எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளது. இந்த பாரம்பரியத்தைத் தொடரும் வகையில், இந்தியாவில் எங்கள் ஸ்மார்ட் வீட்டு உபகரணங்களை பிளிப்கார்ட்டுடன் அறிமுகம் செய்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த உண்மையான ஸ்மார்ட்டான மற்றும் புரட்சிகரமான குளிர்சாதன பெட்டிகள், சலவை இயந்திரங்கள் மற்றும் ஏர் கண்டிஷனர்கள் மூலம், இந்திய நுகர்வோருக்கு பரவலான ஒரு மாற்ற அனுபவங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்த அறிவிப்பு பிளிப்கார்ட்டுடனான எங்கள் வளர்ந்து வரும் கூட்டாண்மையை வெளிப்படுத்துகிறது, மேலும் தற்போதுள்ள ஸ்மார்ட்போன்கள், ஸ்மார்ட் டிவிகள் மற்றும் வீட்டு ஆடியோ ஆகியவற்றின் போர்ட்ஃபோலியோவை முழுமையாக்கவும் உதவுகிறது.

**பிளிப்கார்ட்டின் தனியார் பிராண்டுகளின் துணைத் தலைவர் தேவ் ஐயர்** அவர்கள், "ஒரு நிறுவனம் என்ற முறையில், இந்திய நுகர்வோரின் தன்மைகளை உண்மையிலேயே புரிந்துகொண்டு, தற்போதைய மற்றும் வளர்ந்து வரும் தேவைக்கு ஏற்றவாறு தயாரிப்புகளை வழங்கும் ஒரு உள்நாட்டு தளமாக அறியப்படுவதில் பெருமிதம் கொள்கிறோம். நுகர்வோர் ஸ்மார்ட்டான வாழ்க்கை முறையை அதிகளவில் தேர்வு செய்கிறார்கள் மற்றும் மோட்டோரோலாவிலிருந்து வரவிருக்கும் சிறந்த ஸ்மார்ட் வீட்டு உபகரணங்கள் மூலம், அவர்கள் தங்களின் லிவ்விங் ஸ்பேஸை முற்றிலுமாக மாற்ற முடியும். எங்கள் செயல்திட்டக் கூட்டாண்மை எங்கள் நுகர்வோருக்கு சிறந்த மற்றும் சமீபத்திய தயாரிப்புகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது, மேலும், அனைத்து இந்தியர்களும் ஆவலுடன் எதிர்பார்க்கும் பண்டிகை காலத்திற்கு முன்னதாக, மோட்டோரோலாவுடன் இணைந்து அவர்களின் வழங்குதல்களை அதிகரிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" என்று கூறினார்.

ஸ்மார்ட் ஹோம் சாதனங்களில் அறிமுகமானதைத் தவிர, மோட்டோரோலா பிளிப்கார்ட்டுடன் இணைந்து மோட்டோரோலாவின் ஸ்மார்ட் டி.வி வரம்பையும், சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஹோம் ஆடியோ வரம்பையும் அதன் அடித்தளத்தில் விரிவுபடுத்த உள்ளது - இவை அனைத்தும் வரவிருக்கும் பண்டிகை காலத்திற்காக மேற்கொள்ளப்படவுள்ளது.

செயல்பாட்டின் எளிமை மற்றும் தனிப்பயனாக்கலை வழங்குவதைத் தவிர, இதுபோன்ற ஸ்மார்ட் வீட்டு உபகரணங்கள் நுகர்வோரின் ஸ்மார்ட்போன்கள் / ரிமோட் கண்ட்ரோல்களில் ஒரு பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம் முழு வீட்டையும் மாற்றியமைக்கும் மற்றும் உயிர்ப்பிக்கும் திறனைக் கொண்டுள்ளன. தொழில்துறை அறிக்கையின்படி, 2022 ஆம் ஆண்டில் இந்திய ஸ்மார்ட் ஹோம் சந்தை சுமார் 6 பில்லியன் டாலராக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, உலகளவில் அந்த எண்ணிக்கை 53.45 பில்லியன் டாலர்களை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது உலகம் முழுவதும் ஸ்மார்ட் சாதனங்களுக்கான மிகப்பெரிய வளர்ச்சி வாய்ப்பைக் காட்டுகிறது.

**ஃபிளிப்கார்ட் குழுமம் குறித்து**

இந்தியாவின் முன்னணி டிஜிட்டல் வர்த்தகக் குழுமமாகத் திகழும் ஃபிளிப்கார்ட் குழுமம், ஃபிளிப்கார்ட், மிந்த்ரா, ஜபாங் மற்றும் ஃபோன்பே ஆகிய குழும நிறுவனங்களை உள்ளடக்கியதாகும். 2007 – ம் ஆண்டு, பல மில்லியன் நுகர்வோர்கள், விற்பனையாளர்கள், வணிகர்கள் மற்றும் சிறு வர்த்தகத்தினர் இந்தியாவின் மின்-வர்த்தகப் புரட்சியின் ஒரு பகுதியாகத் திகழ்வதை ஏதுவாக்கியுள்ளது. 200 மில்லியனுக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர் அடித்தளத்துடன், 150 மில்லியனுக்கும் மேற்பட்ட தயாரிப்புகளை 80 – க்கும் மேற்பட்ட வகையினங்களில் ஃபிளிப்கார்ட்; வழங்கி வருகிறது. இந்தியாவில், மின்-வர்த்தகத்தை ஜனநாயகப்படுத்தும் எங்களது முயற்சிகள், அணுகுத்தன்மை மற்றும் கட்டுப்படியாகக் கூடிய தன்மையை மேம்படுத்துகிறது, வாடிக்கையாளர்களை மகிழ்விக்கிறது மற்றும் சூழலமைப்பில் பல லட்சம் பணிகளை உருவாக்குகிறது மற்றும் பல துலைமுறை தொழில்முனைவோர்களுக்கு திறனளிக்கிறது மற்றும் MSME-க்கள், புத்தாக்கத்தை முன்னின்று நடத்தி, பல தொழில்துறை முதல் அம்சங்களை சாத்தியமாக்குவதை ஏதுவாக்கிவருகிறது. ஃபிளிப்கார்ட் ஹோல்சேல் என்னும் எங்கள் புதிய டிஜிட்டல் சந்தையிடத்தின் சமீபத்திய அறிமுகம், இந்தியாவிலுள்ள கிராணாக்கள் மற்றும் MSME-க்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கான எங்களது உறுதிப்பாட்டிற்கான ஒரு சான்றாதாரமாகும். கேஷ் ஆன் டெலிவரி, நோ காஸ்ட் EMI மற்றும் ஈசி ரிட்டர்ன்ஸ் போன்ற பல்வேறு வாடிக்கையாளரை-மையமாகக் கொண்ட புத்தாக்கங்களின் வழியாக ஆன்லைன் ஷாப்பிங்கை அதிகம் அணுகத்தக்கதாகவும் மற்றம் கட்டுப்படியாகக்கூடியதாகவும் பல மில்லியன் இந்தியர்களுக்கு இந்நிறுவனம் மாற்றுகிறது. ஆன்லைன் ஃபேஷன் சந்தையில் மிந்தரா மற்றும் ஜபாங், இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் பேமெண்ட்கள் அடித்தளம் ஃபோன்பே ஆகியவற்றின் வழியாக, இந்திய வர்த்தகத்தின் மாற்றத்தினை தொழில்நுட்பத்தின் வழியாக வழிநடத்திவருகிறது.

**மோட்டோரோலா செயல்திட்ட பிராண்ட் கூட்டாண்மைகள் குறித்து**

*90 ஆண்டுகளுக்கும் மேலாக மோட்டோரோலா பிராண்ட் உயர் தரமான, புதுமையான மற்றும் நம்பகமான தயாரிப்புகளுக்காக உலகம் முழுவதும் அறியப்படுகிறது. மோட்டோரோலாவின் செயல்திட்ட பிராண்ட் கூட்டாண்மை திட்டம் நுகர்வோர் வாழ்க்கையை வளமாக்கும் தனித்துவமான, உயர்தர தயாரிப்புகளை வழங்கும் டைனமிக் நிறுவனங்களுடன் இணைந்து இந்த பிரபலமான பிராண்டின் சக்தியைப் பயன்படுத்த முற்படுகிறது. செயல்திட்ட பிராண்ட் கூட்டாளர்கள், மோட்டோரோலா பொறியியலாளர்களுடன் தங்கள் தயாரிப்புகளை உருவாக்கி உற்பத்தி செய்ய, நெருக்கமாக இணைந்து பணியாற்றுகிறார்கள், மேலும் மோட்டோரோலாவிலிருந்து நுகர்வோர் எதிர்பார்க்கும் துல்லியமான பாதுகாப்பு, தரம் மற்றும் நம்பகத்தன்மை தரங்களை தங்கள் தயாரிப்புகள் பூர்த்தி செய்வதை உறுதிசெய்கின்றனர். மோட்டோரோலா செயல்திட்ட பிராண்ட் கூட்டாண்மை பற்றி மேலும் அறிய, எங்களைப் பின்தொடரவும் @ShopMotorola*

*MOTOROLA, அழகியல் Motorola லோகோ மற்றும் அழகியல் M லோகோ ஆகியவை Motorola Trademark Holdings, LLCயின் வர்த்தக முத்திரைகள் அல்லது பதிவு செய்யப்பட்ட வர்த்தக முத்திரைகள் மற்றும் அவை உரிமத்தின் கீழ் பயன்படுத்தப்படுகின்றன.*

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: media@flipkart.com**